**செய்தி வெளியீடு எண்: 374** **நாள்: 23.5.2008**

**சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை.**

இந்திய அரசு ஒவ்வொர் ஆண்டும் தேசிய இளந்திரு (National Bal Shree) என்னும் விருதை மேடைக்கலை(Creative Performance), அறிவியற் கலை(Creative Innovative Science),படைப்புக் கலை(**Creative Art**), எழுத்துக்கலை(**Creative Writing**) ஆகியவற்றில் புதுமை படைத்திடும் திறமையுடைய சிறார்களுக்கு வழங்குகிறது. இவ்விருது மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் புது தில்லியில், குடியரசுத் தலைவர் மாளிகையில் வைத்து வழங்கப்படுகிறது. 2007 ஆம் ஆண்டிற்கு தமிழகத்தைச் சேர்ந்த 2 சிறுவர்கள் இந்திய அளவில் இளந்திரு விருதை வெளற்றுள்ளனர். திருச்சிராப்பள்ளி சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த செல்வி ஸ்ரீநிதி மேடைக்கலைக்காகவும், சென்னை சவகர் சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த செல்வி சுவேதா விஸ்வகர்மா படைப்புக் கலைக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். **10.06.2008** அன்று மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் இவ்விருது வழங்கப்படவுள்ளது.

தமிழகத்திலுள்ள சவகர் சிறுவர் மன்றப் பள்ளிகள் மாவட்ட அளவில் நடனம், இசை, கணினி, கீபோர்டு, தையல், ஓவியம், கைவினை, ஜிம்னாஸ்டிக், கராத்தே, சிலம்பம், போன்ற பல்வேறுவிதமான கலைகளில் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறது. மாணவர்கள் இந்தப் பயிற்சிகளில் பங்கேற்று, திறன்களை வளர்த்துக்கொண்டு, இச்சிறுவர்களைப் போல இளந்திருவிருதைப் பெற்று நம் மாநிலத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை கேட்டுக்கொள்கிறது.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.